Student/Registration Number | | | | | | | | | | | Centre Number | | | | | | |

**2017 PUBLIC EXAMINATION**

# Tamil

## Continuers Level

**Wednesday 18 October: 2 pm Australian Eastern Daylight Time**

Reading Time: 10 minutes
Working Time: 2 hours and 30 minutes

- *You have 10 minutes to read all the papers and to familiarise yourself with the requirements of the questions. You must not write during this time.*
- *Monolingual and/or bilingual printed dictionaries may be consulted during the reading time and also during the examination.*

## Section 1: Listening and Responding (30 marks)

**Instructions to Students**

1. Allow approximately 40 minutes for Section 1.
2. Write all your answers to the questions in Section 1 in this booklet in black or blue pen. Space is provided for you to make notes.
3. You must answer ALL questions in Part A and Part B.
4. Answer Part A in ENGLISH and Part B in TAMIL.
5. Write your student/registration number and the centre number (if required) on the front cover of this booklet.
6. All question booklets will be collected at the end of the examination.

*© Victorian Curriculum and Assessment Authority 2017*

**Part A** (Questions 1–3)
(15 marks)

---

*Your response will be assessed on how well you:*

- *understand general and specific aspects of texts by identifying and analysing information and convey the information accurately and appropriately.*

---

You will hear THREE texts. Each text will be played twice. There will be a short break between the first and second playings of each text. You may make notes at any time.

Listen carefully to each text and then answer the questions in ENGLISH.

**Marks** | You may make notes in this space.

**Text 1**

1. How did Thanapalan's visitors show that they were his good friends? **3**

Marks

You may make notes in this space.

**Text 2**

2. How will the community benefit from Seralathan's initiative? **5**



PLEASE TURN OVER

Marks

You may make notes in this space.

**Text 3**

3. (a) How does the father show his concern for his family? **3**

(b) Describe the father's changing mood during the conversation. **2**

(c) Explain the contradictory request made by the cleaner. **2**

**Part B** (Questions 4–6)
(15 marks)

---

*Your response will be assessed on how well you:*

- *understand general and specific aspects of texts by identifying and analysing information and convey the information accurately and appropriately.*

---

You will hear THREE texts. Each text will be played twice. There will be a short break between the first and second playings of each text. You may make notes at any time.

Listen carefully to each text and then answer the questions in TAMIL.

**Marks** | You may make notes in this space.

**Text 4**

4. (a) What is the main purpose of the son's call to his mother? **1**

மகன் தாயாரை அழைத்தமைக்குரிய பிரதான நோக்கம் யாது?

(b) Describe the context for the phone call. **4**

இந்தத் தொலைபேசி அழைப்பு இடம்பெற்ற சந்தர்ப்பத்தை விபரிக்குக.

(c) How could the outcome have been avoided? **1**

இன்றைய விளைவு எவ்வாறு தவிர்க்கப்பட்டிருக்கலாம்?

Marks | You may make notes in this space.

**Text 5**

5. (a) What is the link between the first and last lines of the poem? **1**

இப்பாடலின் முதலாவது வரிக்கும் கடைசி வரிக்கும் இடையில் உள்ள தொடர்பு என்ன?

(b) What colourful images does the poet use to evoke a totally independent India? **3**

இந்தியா பூரண சுதந்திரம் அடையுமாறு அழைப்பதற்கு, கவிமணி பயன்படுத்திய மனதைக் கவரும் உருவகங்கள் எவை?

Marks | You may make notes in this space.

**Text 6**

6. In what way is Nirmalan like his grandfather? Use examples from the text to support your view. **5**

   நிர்மலன் எந்த வகையில் தனது பாட்டனாரை ஒத்திருக்கிறார்? உமது கருத்துக்கு ஆதரவாக இப்பனுவலிலிருந்து உதாரணங்களைப் பயன்படுத்துக.

**End of Section 1**

BLANK PAGE

Student/Registration Number | | | | | | | | | | | Centre Number | | | | | |

# 2017 Public Examination

# Tamil
## Continuers Level

## Section 2: Reading and Responding (25 marks)

**Instructions to Students**

1. Allow approximately 1 hour and 10 minutes for Section 2.
2. Write all your answers to the questions in Section 2 in this booklet in black or blue pen.
3. You must answer ALL questions in Part A and Part B.
4. Answer Part A in ENGLISH and Part B in TAMIL.
5. Write your student/registration number and the centre number (if required) on the front cover of this booklet.
6. All question booklets will be collected at the end of the examination.

© Victorian Curriculum and Assessment Authority 2017

**Part A** (Questions 7–8)
(10 marks)

---

*Your response will be assessed on how well you:*

- *understand general and specific aspects of texts (for example, by comparing, contrasting, summarising and/or evaluating) and convey the information appropriately.*

---

7. Read the text and then answer in ENGLISH the question that follows.

**வாசனைத் திரவியங்கள்**

வாசனைத் திரவியங்கள் எனப்படுகின்ற மிளகு, சீரகம், கறுவா, ஏலம், கராம்பு, மஞ்சள் முதலான சில தாவரங்களின் பகுதிகள், உணவுக்கு உருசியையும் நல்ல மணத்தையும் தருகின்றன. அதேசமயம், இவை உடலுக்கு நோய் எதிர்ப்புச் சக்தியையும் நோய்களைக் குணப்படுத்தும் தன்மையையும் வழங்குகின்றன.

வெப்பவலயப் பகுதிகளான இந்தியாவிலும் இலங்கையிலும் இவை இயற்கைத் தாவரங்களாயிருந்து தொடர்ந்து மக்களால் பயிரிடப்பெற்று வருகின்றன.

பலப்பல ஆயிரம் வருடங்களுக்கு முன்பே இவற்றின் அரிய பயன்கள் சித்தர்களால் அறியப்பெற்று, உணவே மருந்தாகும் வண்ணம் உணவில் சேர்க்கப்பட்டு வருகின்றன. மேலும் வாசனைத்திரவியங்கள் கலந்து சமைத்த உணவு பல நாட்கள் கெட்டுப்போகாது இருக்கும். இதனால், உணவை நீண்டகாலம் பாதுகாக்கக்கூடிய குளிரூட்டுதல், தகரத்தில் அடைத்தல் போன்ற வசதிகள் இல்லாதிருந்த காலத்தில், ஐரோப்பாவில் இவற்றின் பயன்பாடு மேலும் அவசியமாயிற்று. இந்தக் காரணங்களால், பலநூறு வருடங்களாக அங்கிருந்து வியாபாரிகள் தரைவழியாக இந்தியாவுக்குத் தொடர்ந்து வந்து, இப்பொருட்களை வாங்கிச் சென்றார்கள். அந்தத் தரைவழிப் பாதையைத் துருக்கியர்கள் தடை செய்தமையால் ஐரோப்பியர்கள் பலவாறு முயன்று, சில காலத்தின் பின் கடல் வழிப்பாதையைக் கண்டுபிடித்து இந்தியாவுக்கும் இலங்கைக்கும் வந்து இவற்றைத் திரும்பவும் பெற்றுக்கொண்டனர்.

இன்று பல இந்தியர்களும் இலங்கையர்களும் உலகின் பல்வேறு நாடுகளில் குடியேறி இருக்கிறார்கள்.

இவர்கள் வாசனைத்திரவியங்களைத் தாங்கள் பயன்படுத்துவதுடன் ஏனைய இனத்தவர்களுடன் பகிர்ந்து உண்டும், அவர்களுக்கு விற்பனை செய்தும் வருவதனால் இன்று இத்திரவியங்கள் உலகம் முழுவதும் மேலும் பிரசித்தி பெற்றுள்ளன.

மேலும் இலத்திரனியல் மற்றும் சமூக ஊடகங்களில் சமையல்முறைகள், மருத்துவக் குறிப்புகள் என்பன வழங்கப்பெறும்போதும், சமையல் செய்துகாட்டப்படும் போதும் வாசனைத்திரவியங்களை அதிகம் உபயோகிப்பதனால் இன்று அவற்றின் பிரசித்தியும் தேவையும் விற்பனையும் உலகம் முழுவதும் மிகவும் அதிகரித்துள்ளன. இதனால் வேறுபல வெப்ப வலய நாடுகளும் இப்போது இவற்றைப் பயிரிடுவதற்கும் பயன்படுத்துவதற்கும் விற்பனை செய்வதற்கும் முயற்சி செய்கின்றன.

QUESTION

**Marks**

Complete the following table by providing the reasons for the use and the spread of spices throughout the ages. **5**

| **Period** | **Reason(s)** |
| --- | --- |
| thousands of years ago | • ______________________________ <br> ______________________________ <br> ______________________________ <br> • ______________________________ <br> ______________________________ <br> ______________________________ |
| hundreds of years ago | • ______________________________ <br> ______________________________ <br> ______________________________ |
| today | • ______________________________ <br> ______________________________ <br> ______________________________ <br> • ______________________________ <br> ______________________________ <br> ______________________________ |

8. Read the text and then answer in ENGLISH the questions that follow.

**ராஜா ரவிவர்மா**

இந்திய ஓவிய வரலாற்றில் இன்றுவரை மிகவும் புகழ்பெற்ற ஓவியர்களில் ஒருவர் ராஜா ரவிவர்மா. இன்று முழு இந்தியாவுக்கும் சேலை தேசிய உடையாக விளங்குவதற்கு இவரே காரணமாக இருந்தார் எனலாம். நூற்றைம்பது வருடங்களுக்குமுன்பு இவர் வரைந்த ஓவியங்களில் காணப்பெற்ற பெண்களின் உருவங்களில் இருந்த வண்ண வண்ணச் சேலைகளும் நகைகளும் இன்றுங்கூட மிகவும் பிரபல்யமானவையாக உள்ளன.

அதுவரை கற்பனை உருவங்களாக இருந்த இந்தியாவின் பெருமைவாய்ந்த புராணங்கள், இதிகாசங்கள், காப்பியங்கள் என்பவற்றின் கதாபாத்திரங்கள் ரவிவர்மாவின் தூரிகையால் அழகிய, வண்ண உருவெடுத்தன. அவை அழகையும் தனிச்சிறப்பான உடல் அமைப்புகளையும் பண்புகளையும் வெளிப்படுத்தி மக்கள் மனங்களைப் பெரிதும் கவர்ந்தன. இன்றும் அந்த உருவங்களே மாற்றம் எதுவுமின்றி நிலைத்து நிற்கின்றன.

ரவிவர்மா **1848**ஆம் ஆண்டு திருவிதாங்கூர் என்ற இடத்தில் திறமைவாய்ந்த ஒரு கலைக்குடும்பத்தில் பிறந்தார். சிறுவயதிலேயே ஓவியத்தில் விருப்பம் கொண்டு பல படங்களை வரைந்தார். இந்தியாவின் மேன்மைமிகுந்த புராணங்களையும் இதிகாசங்களையும் காப்பியங்களையும் இவர் கவனமாகக் கற்றார்.

ராமசாமி நாயுடு என்பவரிடம் ஓவியம் கற்று, நீர் வர்ணங்களைப் பயன்படுத்துவதில் திறமைபெற்றார். இவரது திறமைகளைக் கண்ட அந்த ஊர் மன்னன், இவருக்குத் தனது மாளிகையில் ஒருபகுதியைக் கொடுத்தும் பல பரிசுகளைக் கொடுத்தும் ஊக்குவித்தான். இங்கிருந்து இந்தியாவின் பல பாகங்களுக்கும் சென்ற ரவிவர்மா பல இடங்களிலும் காணப்பெற்ற சிற்பங்களை நன்கு ஆராய்ந்தார். அதுவரை இலக்கிய கதாபாத்திரங்கள் சிற்ப வடிவங்களாகவே இருந்தன.

இந்தியாவை ஆண்ட ஐரோப்பியரின் தொடர்பினால் எண்ணெய் வர்ணங்கள் பற்றி அறிந்துகொள்ளும் சந்தர்ப்பம் இவருக்குக் கிடைத்தது. இவர் எண்ணெய் வர்ணங்களைப் பயன்படுத்தத் தொடங்கியதும், இவரது புகழ் உலக நாடுகளுக்கும் பரவத் தொடங்கியது.

**1873**இல் வீயன்னாவில் நடைபெற்ற உலக ஓவியக்கண்காட்சியில் இவரது ஓவியத்துக்கு முதற்பரிசு கிடைத்தது. இதன்பின்னர் இவரது ஓவியங்கள் ஐரோப்பாவில் அச்சிடப்பெற்று, பெருந்தொகைப் பணத்துக்கு விற்பனை செய்யப்பெற்றன. அங்கு அரசர்களும் செல்வந்தர்களும் இவரது ஓவியங்கள் தமது மாளிகைகளில் தொங்குவதைப் பெருமையாகக் கருதினர்.

சாதாரண இந்திய மக்களும் தனது ஓவியங்களை வாங்கக்கூடியதாக இருத்தல் வேண்டும் என்று கருதிய ரவிவர்மா அவற்றை, இந்தியாவிலேயே அச்சிட்டுக் குறைந்த விலையில் கிடைக்கச்செய்தார்.

பரந்த இந்தியாவின் பல்வேறுபட்ட மக்களை, தான் வரைந்த ஓவியங்களால் ஒரேகுலத்தினர் ஆக்கி ஒற்றுமைப்படுத்திய இவரது புகழ் இவரது ஓவியங்கள் போலவே நீண்டகாலம் நிலைத்து நிற்கும்.

QUESTIONS

**Marks**

(a) How did Ravivarma develop his natural skills to become the incomparable illustrator of the ancient scriptures of India? **4**

(b) What role did Ravivarma play in unifying the diverse people of India? **1**

**Part B** (Question 9)
(15 marks)

---

*Your response will be assessed on how well you:*
- *demonstrate an understanding of the stimulus text*
- *write text appropriate and relevant to context, purpose and audience*
- *structure and sequence information and ideas*
- *manipulate language structures and vocabulary in Tamil.*

---

9. Read the text and then answer the question in approximately 150 words in TAMIL on page 8.

**ஒஸ்ரேலியாவில் நமது தமிழர்கள்!**

வெளிநாட்டுத் தமிழர் வாழ்க்கையின் மாதிரி ஒன்றை வாசியுங்கள்!

செயற்கைக்காது தொடர்பான கல்வி பெறுவதற்காகப் பத்து நாட்கள் ஒஸ்ரேலியா சென்று வந்தேன். அங்கே நீண்டகாலம் வசித்துவருகின்ற உறவினர் ஒருவர் வீட்டில் தங்கியிருந்தேன். (நகரத்தினதும் ஆட்களினதும் பெயர்களைக் குறிப்பிட விரும்பவில்லை). குடும்பத்தலைவர் என்னுடன் பேசும்போது தமிழிலும் தனது குடும்ப அங்கத்தவர்களுடன் பேசும்போது ஆங்கிலத்திலும் பேசினார். பிள்ளைகள் மூவர். மூத்தவர் பெண் பல்கலைக்கழகத்திலாம். இளையவர்கள் ஆண்கள், ஏழாம் ஐந்தாம் வகுப்புகளில் படிக்கிறார்கள். தந்தையைக் கண்டால் 'ஹாய் டட்' என்பார்கள். தமிழ் கற்கிறார்களா? என்று கேட்டேன். 'இல்லை நாம் கதைத்தால் மூத்தவளுக்கு விளங்கும் பேசமாட்டாள்' என்றார்.

உடைகள் விடயத்தில் தந்தை, தாய், மகள் ஆகியோரில் எந்த வேறுபாடும் தெரியவில்லை. ஒரேமாதிரியான ஆடைகளையே அனைவரும் அணிகிறார்கள். தலைமுடிவெட்டுக்களும் அவ்வாறே! இளமையில் ஊரில் நீண்டகூந்தலுடனும் மல்லிகை மாலையுடனும் தலைவி இருந்த கோலத்தை மனதில் எண்ணிக்கொண்டேன்.

குடும்பத்தலைவியின் தாயார் எனக்கு நெருங்கிய உறவினர், ஊரில் என்னுடன் நன்கு பழகியவர், வயோதிபர் மடத்தில் இருக்கிறார், நடக்கமாட்டார். என்னைக் கூட்டிச்சென்று காட்டினார்கள். ஊரைப்பற்றியும் இங்குள்ள பலரைப்பற்றியும் விசாரித்தார். மனம் என்ன பாடுபட்டிருக்கும் என்று விளங்கவில்லை.

மிகப் பெரிய ஆடம்பரமான வீட்டில் இருக்கிறார்கள். ஆனாலும், 'மாமி அங்கு நல்ல வசதியாக இருக்கிறார் என்றார்' குடும்பத்தலைவர்.

சமய வழிபாடுகளோ ஏனைய தமிழச் சமூகத்தினருடனான உறவாடலோ நடப்பதாகத் தெரியவில்லை.

ஏன் தான் நம் தமிழர்கள் வெளிநாடுகள் சென்று இவ்வாறு தமிழ்ப் பண்பாட்டுக் கொலை செய்கிறார்களோ தெரியவில்லை!

முகுந்தன் இராசநாயகம்

QUESTION

You were upset by the article you have just read that was published in the newspaper, *Thamizan*. Write a letter to the editor, addressing the observations of Mukunthan Rasanayagam and providing a different description of Tamils abroad.

தமிழ் பேசும் நாடொன்றில் வெளியான ‘தமிழன்’ பத்திரிகையில் வெளிவந்த இக்கட்டுரையை வாசித்து மனக்குழப்பம் அடைந்துள்ள நீர், முகுந்தன் இராசநாயகத்தின் கருத்துக்களை மறுத்து, அப்பத்திரிகை ஆசிரியருக்கு, வெளிநாட்டுத் தமிழர் பற்றிய வேறுபட்ட விவரணங்களை வழங்கி, ஒரு கடிதம் எழுதுக.

---

You may make notes in this space.

*Do not remove this page from the question booklet.*

| Student/Registration Number | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|

| Centre Number | | | | | | |
|---|---|---|---|---|---|---|

Tamil
Continuers Level

Question 9

**End of Section 2**

BLANK PAGE

Student/Registration Number | | | | | | | | | | | Centre Number | | | | | | |

# 2017 Public Examination

# Tamil
## Continuers Level

## Section 3: Writing in Tamil (20 marks)

**Instructions to Students**

1. Allow approximately 40 minutes for Section 3.
2. Write your answer to a question from Section 3 in this booklet in black or blue pen. Space is provided for you to make notes.
3. You must answer ONE question in TAMIL.
4. Write your student/registration number and the centre number (if required) on the front cover of this booklet.
5. All question booklets will be collected at the end of the examination.

© Victorian Curriculum and Assessment Authority 2017

**Section 3** (Questions 10–12)
(20 marks)

---

*Your response will be assessed on how well you:*
- *demonstrate depth of treatment of information, ideas and/or opinions*
- *write text appropriate and relevant to context, purpose and audience*
- *structure and sequence information and ideas*
- *manipulate language structures and vocabulary in Tamil.*

---

Answer ONE question from this section in approximately 250 words in TAMIL.

10. Write an article for a tourism magazine, evaluating the advantages and disadvantages of touring within Australia versus overseas.

    ஒஸ்ரேலியாவுக்கு உள்ளேயே சுற்றுலா செல்லுதல் அல்லது வெளிநாடுகளுக்குச் சுற்றுலா செல்லுதல் இரண்டிலும் உள்ள சாதகமானதும் பாதகமானதுமான விளைவுகளை மதிப்பீடுசெய்து, சுற்றுலாச் சஞ்சிகை ஒன்றுக்கு ஒரு கட்டுரை எழுதுக.

11. Your school organised 10 days of work experience for you in an organisation where you are keen to find a job in the future. Your school is about to send another group of students for the same experience. Your principal has asked you to write the text of a speech informing these students about your experience.

    உமக்கு எதிர்காலத்தில் வேலை கிடைக்கவேண்டும் என்று நீர் எதிர்பார்த்திருக்கின்ற நிறுவனத்தில், உமது பாடசாலையூடாகப் பத்து நாட்கள் வேலை அநுபவம் பெற்று வந்துள்ளீர். உமது பாடசாலை இன்னொரு குழுவினரை அதே அநுபவத்தைப் பெறுவதற்கு அனுப்பும் நிலையிலுள்ளது. உமது பாடசாலை அதிபர் கேட்டுக்கொண்டதன்படி, அந்த மாணவர்களுக்குப் பொருத்தமான தகவல்களை வழங்கி நீர் ஆற்றவுள்ள உரையின் பனுவலை எழுதுக.

12. You interviewed an Australian-born Tamil teenager who has just returned to Australia after winning a popular singing competition in Tamil Nadu, where hundreds of local singers competed. Write the script of the interview.

    தமிழ்நாட்டில் இடம்பெற்ற புகழ்பெற்ற ஒரு பாட்டுப் போட்டியில் பலநூற்றுக்கணக்கான அந்த நாட்டுப்போட்டியாளர்களுடன் போட்டியிட்டு வென்றுவந்திருக்கும் ஒஸ்ரேலியாவில் பிறந்துவளர்ந்த பதின்ம வயதினர் ஒருவரை நீர் பேட்டி கண்டுள்ளீர். அந்த நேர்காணலின் பிரதியை எழுதுக.

You may make notes in this space.

Question Number:

**End of Section 3**